1976 மார்ச் 21]

Madras Women's Cottage Industries Central Co- operative Society

* 480 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the Government have donated lands in Madras City to the Madras Women's Cottage Industries Central Co-operative Society; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

கோயம்புத்தூர் டெக்ஸ்டூல் கம்பெனி

* 481 வினா—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு கோவையிலுள்ள டெக்ஸ்டூல் கம்பெனியை எடுத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டெக்ஸ்டூல் தொழிற்சாலையின் சிக்கல்கள், அதனைப் பல்வகைப்படுத்துவதற்கான வாய்ப்புகள், அதனை முழுமையாகப் பயன்படுத்துவது முதலியவை குறித்து ஆராய்வதற்காக அரசு ஒரு குழுவினை அமைத்தது. இக்குழு அனுப்பிய அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்தக் குழு கொடுத்துள்ள யோசனைகளை அரசு உடனடியாக பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகளை எப்போது எடுக்கும் என அறிய முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, குழுவினுடைய பரிசீலனைகளை நிறைவேற்ற கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் அரசாங்கத்திலிருந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அதை அரசு ஆழ்ந்து பரிசீலித்த பின்னர்தான் முடிவு சொல்லப்படும்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, டெக்ஸ்டூல் கம்பெனியை இந்தக் குழுவின் மூலமாக எடுத்து நடத்த உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அறிக்கையைப் பற்றி நாம் முடிவு எடுத்ததற்குப் பின்னாலே எந்த எந்த வகையில் நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : இந்தத் தொழிற்சாலையில் மூவாயிரம், நாலாயிரம் பேர்கள் வேலை செய்தார்கள். இது மூடப்பட்டு இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்ட காரணத்தினால் இதை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?